## தலைப்பு 020 – தேர்தல்கள் ஆணைக்குழு

------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 20 - தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 12 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகக்ளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக இருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | இந்த அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|
| முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீதியில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் இணக்கம் செய்யும் போது வேறுபாடுகள் காணப்பட்டமை. | 1.6.1(ஆ)(i) |

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய ரூபா 4,132,893 ஆன ஊழியர் கடன் வட்டி, | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய மாதிரி படிவத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான காசுப்பாய்ச்சலின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 28,531,110 தொகையான கட்டணம், மிகை கட்டணம், தண்டப் பணம் மற்றும் அனுமதிப்பத்திர பெறுவனவுகள் ஆக காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது இந்த தவறை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | உரிய மாதிரி படிவத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | முன்னைய ஆண்டின் நிதியல்லா சொத்துக்களின் இறுதி மீதியில் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் இணக்கம் செய்யும் போது பூர்த்தி செய்யப்படாத கட்டிட மீதி ரூபா 05 மில்லியன் குறைத்தும், வாகன மீதி ரூபா 58.33 மில்லியன் அதிகரித்தும், ஏனைய இயந்திர பொறிகள், உபரகணங்களின் மீதி ரூபா 10.26 மில்லியன் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது அரசாங்க கணக்குகள் திணைக்களத்தால் நிலையான சொத்துக்கள் தரமேற்றும் போது (Upload) ஏற்பட்ட வழுக்களினால் பூர்த்தி செய்யப்படாத கட்டிட மீதி ரூபா 05 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன், வாகன மீதி ரூபா 58.33 மில்லியன் குறைத்தும் இயந்திர பொறிமுறைகள், உபகரணங்கள் ரூபா 10.26 மில்லியனால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த தவறு 2022 ஆம் ஆண்டில் சரிசெய்யப்பட்டமையால் ஆரம்ப மீதி மாற்றமடைந்துள்ளது. | முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக காண்பித்து உரிய சீராக்கங்கள் தனியாக காண்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மெய்யாய்வில் இனங்காணப்பட்ட கிரயம் ரூபா 6,717,017 ஆன சொத்துக்கள் 2022 ஆம் ஆண்டின் போது விற்றுத் தீர்க்கப்பட்டிருந்த போதிலும், அப்பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | விற்றுத் தீர்க்கப்பட்ட பொருட்களை அகற்றுவதற்காக Asset List இல் அடையாளம் இட்டு கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையால் அந்த பணிகள் முடிவடைந்தவுடன் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விற்றுத் தீர்க்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் கணக்குகளில் இருந்து அகற்றப்படல் வேண்டும். |
| (iii) | மதிப்பீட்டு பெறுமதி ரூபா 255,459,809 ஆன 03 கட்டிடங்கள் மற்றும் 02 காணிகள் என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டிடங்களினதும் காணிகளினதும் பெறுமதி தனித்தனியாக பெறப்படாமையினால் CIGAS கணனி முறைமை ஊடாக கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (iv) | ரூபா 3,118,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்ட 02 காணிகள் ரூபா 3,700,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 582,000 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டது. | 2023 ஆம் ஆண்டின் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (v) | ஆணைக்குழுவிற்கு உரித்தற்ற கூட்டுப்பெறுமதி ரூபா 40,950,000 ஆன 02 கட்டிடங்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | CIGAS தரவு முறைமையில் இருந்து அகற்றுவதற்காக உரிய கட்டிடம் மற்றும் காணிகளின் பெறுமதி தனித்தனியாக கிடைக்காமையினால் உரிய தகவல்களை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய பெறுமதிகளை அகற்றி கணக்குகளை சரி செய்தல் வேண்டும். |

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணம் பீ கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 100,974,010 ஆக இருந்த போதும், 2022 இன் நிதிக் கூற்றுக்களில் ஏசீஏ 5 படிவத்தின் ஆரம்ப மீதியாக ரூபா 101,108,337 காண்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் தீர்த்து வைக்கப்பட்ட ரூபா 134,327 கடன் மீதி அந்த ஆண்டிலும் ஆணைக்குழுவிற்கு வரவு வைக்கப்பட்டிருந்த போதும் அது இணங்காணாமையினால் 2021 இன் நிதிக் கூற்றுக்களின் காண்பிக்கப்படவில்லை. இதனை சரிசெய்வதற்காக நாட்குறிப்பு பதிவுகள் 2023 ஆம் ஆண்டில் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆரம்ப மீதியை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடு தயாரிக்காமையின் காரணமாக ஒரு மீண்டெழும் செலவின விடயம் மற்றும் 02 மூலதன செலவின விடயங்களில் முறையே ரூபா 288,601 மற்றும் ரூபா 20,319,312 சேமிக்கப்பட்டிருந்தது. அது தேறிய நிதிஏற்பாட்டில் 48 சதவீதம் முதல் 100 வரையிலான வீச்சில் காணப்பட்டது. | உணவு மற்றும் சீருடைகளின் செலவின விடயத்தின் கீழ் உணவு பானங்களுக்கான செலவினங்கள் கணக்கீடு செய்யப்படாமையினால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டில் காலாண்டு அடிப்படையில் நிதிஏற்பாடு பகிர்ந்தளிக்கப்பட்டமையால் 1303 செலவின விடயத்தில் முதல் மூன்று காலாண்டிலும் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 2002 மற்றும் 2105 செலவின விடயங்களுக்குரிய | செலவின மதிப்பீடு சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

செலவினங்கள் எழாதிருந்தமையினால் நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாட்டின் சேமிப்பு ரூபா 2,300,891 மற்றும் அவற்றின் பொறுப்புக்கள் ரூபா 82,051,967 ஆனமையால் சேமிப்பை விஞ்சி ரூபா 79,751,076 காணப்பட்டது. | 1409, 1301 மற்றும் 1402 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 43,000,000 தொகை, ரூபா 3,000,000 தொகை மற்றும் ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டு பதிவழிக்கப்பட்டுள்ளது. நிதிப் பிரமாணம் 66 மாற்றல்களின் கீழ் ஏனைய செலவின விடயங்களில் ரூபா 8,300,000 நிதி ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த செலவின விடயங்களில் சேமிப்பை விஞ்சியிருந்தது. | நிதிஏற்பாட்டை விஞ்சாமல் பொறுப்புக்களுக்கு உடன்படல் வேண்டும். |
| (ஆ) | 07 செலவின விடயங்களுக்குரிய கூட்டுமொத்தமாக ரூபா 63,132,679 ஆன பொறுப்புக்கள், கட்டளைகள் iii கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் பொறுப்புக்கள் அந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிஏற்பாடு சேமிப்பாக காண்பிக்கப்படுமாயின் மாத்திரம் அதில் உள்ளடக்க முடியும். அதனால் மேற்கூறப்பட்ட பொறுப்புக்களின் பெறுமதி அதில் உள்ளடக்கப்படவில்லை. | செலவின தலைப்புக்களுக்குரிய சகல பொறுப்புக்களும் சரியாக கணக்குகளில் காண்பித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **பெனர்களை கொள்வனவு செய்தல்.** | | |
| 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் வாக்காளர் தினத்தை கொண்டாடும் பணிகளை உள்ளடக்கியிருந்தமையால் அந்த நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னரே தயாரிக்கப்பட்ட திட்டமாக இருக்கும் போது அதற்காக தேவையான 730 பெனர்கள் தயாரித்துக் கொள்ளும் அவசர தேவையொன்றாக கருதி சந்தை விலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்திக்கு முரணாக கேள்வி சமர்ப்பிப்பதற்காக வழங்க வேண்டிய 07 நாள் காலம் ஆகக் குறைந்த கால எல்லைக்கு பதிலாக வழங்குனர்களுக்கு அதற்காக 02 நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. | வாக்காளர்களின் தினம் தொடர்பாக நடைபெற்ற பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களுக்கான அறிவுறுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் போது உரிய பெனர்கள் மாவட்ட அலுவலகத்திற்கு கையளிப்பதன் மூலம் போக்குவரத்து செலவினத்தை குறைக்கக் கூடியதாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்டமையால் அத்திகதிக்கு முன்னர் பெனர்களை அச்சிட்டு பூர்த்தி செய்து அலுவலகத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இதனால் அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த கிரயமொன்றை செய்ய வேண்டி ஏற்படும் வகையில் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 பந்தியில் குறிப்பிடப்படுகின்ற அவசர பெறுகைகளுக்காக மேற்கூறப்பட்ட கால எல்லையில் குறைக்கக் கூடிய விடயங்களின் பிரகாரம் வழங்குனர்களுக்கு வழங்கப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை 02 வரை குறைக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | **தரவு நிலையங்களுக்காக மேலதிக மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்தல்** | | |
| (i) | இந்த பெறுகைகளுக்காக 2022 ஏப்ரல் 22 ஆம் திகதி 08 வழங்குனர்களை வரவழைத்து கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், பெறுகை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதி மே 13 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவைகளின் பிரகாரம் பின்னர் அந்த திகதி 2022 மே 20 ஆம் திகதி வரை மாத்திரம் நீடிக்கப்பட்டிருந்ததுடன், அது வழங்குனர்களுக்கு கூறு விலை சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியில் 02 நாட்களுக்கு முன்னர் அதாவது 2022 மே 18 ஆம் திகதியே அறிவிக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் விண்ணப்பங்களை சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய இறுதி திகதி மே மாதம் 13 ஆக இருந்த போதும், நாட்டில் காணப்பட்ட மோசமான நிலைமையின் காரணமாக அத்திகதியில் எந்தவொரு கூறுவிலையும் சமர்ப்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் விண்ணப்பங்களை கையேற்றும் இறுதி திகதி 2022.05.20 ஆக திருத்தப்பட்டு அது தொடர்பாக சகல வழங்குனர்களுக்கும் 2022.05.18 ஆம் திகதி மீண்டும் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், போதியளவான காலம் காணப்படாமையினால் மீண்டும் கேள்வி திறக்கும் திகதி 2022.05.23 ஆக திருத்தப்பட்டு வழங்குனர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி திகதியை திருத்திக் கொள்வதற்கு போதியளவான காலத்தில் வழங்குனர்களுக்கு அறிவித்தல் வேண்டும். |
| (ii) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் கேள்வி கோரல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட நேரத்தின் போது கேள்வியினை பெற்றுக்கொள்ளல் முடிவுறுத்த வேண்டியிருந்ததுடன், தாமதமாக கிடைக்கின்ற கேள்வி பொறுப்பேற்க முடியாதிருந்தமை குறிப்பிடப்பட்ட போதிலும் | இந்த கேள்வியின் விலைகள் கையேற்கப்பட்ட இறுதி திகதி 2022.05.20 ஆக இருந்த போதும், பின்னர் மீண்டும் கையேற்கும் திகதி 2022.05.23 ஆக திருத்தப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கண்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோவையின் பிரகாரம் இந்த ஒப்பந்தத்திற்கான கூறுவிலை கோரல் கையேற்கப்பட்ட இறுதி திகதி 2022 மே 20 ஆக இருந்தும் தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களின் விலைகள் 2022 மே 21 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | மின்பிறப்பாக்கி இயந்திரம் உரிய மாதிரிகளுக்கு இணங்கும் வகையில் மின்பொறியியலாளரிடம் இருந்து உறுதிப்படுத்தல் பெறப்படாமல், ரூபா 6,912,420 ஆன வரியின்றிய பெறுமதியில் ரூபா 4,767,000 இற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 30 ஆம் திகதி காசோலை எழுதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்ட ரூபா 4,767,000 காசோலை 2022.12.30 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவழிக்கப்பட்டிருந்த போதிலும், மின்பிறப்பாக்கி இயந்திரம் தொடர்பான தரவு நிலையத்திற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்பட்டமை உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டதன் பின்னரே அந்த காசோலைகள் உரிய நிறுவனத்திற்கு விநியோகிக்கப்படுகின்றது. | உரிய மாதிரிகளுக்கு இணங்கியிருப்பதை உறுதிப்படுத்திய பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்ததுடன் அரசாங்க நிதியினை அங்கீகாரம் இன்றி நிறுத்தி வைக்காதிருத்தல் வேண்டும். |
| (iv) | மீளாய்வாண்டின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் இதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 ஆக இருந்த போதும் அதன் உள்ளபடியான பெறுமதியான ரூபா 6,912,420 மதிப்பீடு செய்யப்பட்ட தொகையினை விட 176 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், அதன் பிரகாரம் பெறுகை திட்டம் திருத்தப்பட்டிருக்கவில்லை. | டொலரின் பெறுமதி அதிகரித்தமை மற்றும் நாட்டில் காணப்பட்ட மின்சார நெருக்கடிகளின் காரணமாக மின்பிறப்பாக்கி இயந்திரங்களின் விலைகள் கனிசமாக உயர்வடைந்து சென்றமையால் விலை அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. | பெறுகைகள் திட்டம் திருத்தப்படல் வேண்டும். |
| (v) | மின்பிறப்பாக்கி இயந்திரம் பொருத்துவதற்காக தரவு நிலையத்தின் சேவர் இயந்திரம் | பணிகள் முடிவடைந்த பின்னர் பற்றுச் சீட்டுக்களை சமர்ப்பித்து தகவல் தொழில்நுட்ப பிரிவின் | முன் அங்கீகாரம் பெற்று கொடுப்பனவு மேற்கொள்ளப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | செயலிழந்திருந்துடன், மீண்டும் சிறந்த நிலைமைக்கு கொண்டு வருவதற்காக முன் அங்கீகாரம் இன்றி ரூபா 66,000 வெளி நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | பரிந்துரை அடிப்படையில் அங்கீகாரம் பெற்று கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (இ) | **மின்பிறப்பாக்கி இயந்திரத்தை ஸ்தாபிப்பதற்காக மேவுகை கூடாரம் ஒன்றை நிர்மாணித்தல்** | | |
| (i) | இந்த ஒப்பந்தத்திற்கான கூறுவிலைகள் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்யும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு 2½ மாத காலத்தின் பின்னரே கேள்வி கோரப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தம் 2022 ஆம் ஆண்டில் பதிவுசெய்த வழங்குனர் அல்லாத மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்த நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | இதற்காக 2022 ஆம் ஆண்டில் பதிவு செய்த ஒப்பந்தகாரரிடம் இருந்தும் மற்றும் அதற்கு முன்னர் ஆணைக்குழுவின் நிர்மாண நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிய சத்மிண கன்ஸ்ட்ரக்சன் கம்பனியில் இருந்தும் மற்றும் இந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு உத்தேசித்த வின்சி இன்ஜினியரின் (தனியார்) கம்பனியில் இருந்தும் கூறுவிலை கோரப்பட்டிருந்ததுடன், ஆகக் குறைந்த கூறுவிலை சமர்ப்பித்த வின்சி இன்ஜினியரின் (தனியார்) கம்பனிக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இந்த ஒப்பந்தத்திற்காக 2022 ஒக்டோபர் 18 ஆம் திகதி கூறுவிலை கோரப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்தம் கையளித்த நிறுவனம் 2022 செப்டம்பர் 08 ஆம் திகதி அதாவது கூறுவிலை கோருவதற்கு முன்னர் மதிப்பீடு ஒன்றை சமர்ப்பித்திருந்தது. | ஆரம்பத்தில் இந்த ஒப்பந்தம் இயந்திரத்தை கொள்வனவு செய்த கம்பனியின் மூலம் நிறைவேற்றுவதற்கு கருத்து தெரிவிக்கப்பட்டதன் பின்னர் திறந்த கூறுவிலை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 08 வழங்குனர்களிடம் இருந்து கூறுவிலை | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கோரப்பட்டிருந்ததுடன், சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு கூறுவிலைகளையும் விட சாதகமாக கூறுவிலை சமர்ப்பித்த வின்சி கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. | |
| (iii) | ரூபா 795,000 ஆன ஒப்பந்த தொகை தொழில்நுட்ப உத்தியோகத்தரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டில் 38 சதவீதத்தை விட அதிகரித்திருந்தது. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையின் அடிப்படையில் கூறுவிலை விரைவாக அதிகரித்துச் சென்றதன் அடிப்படையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. | சாத்தியமான மற்றும் சரியான மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | புத்தளம் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் காணப்படுகின்ற மின்பிறப்பாக்கி இயந்திரம் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | இது தற்போது பிரதான அலுவலகத்தில் காணப்படுவதுடன், தேவையின் அடிப்படையில் ஏனைய அலுவலகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மின்பிறப்பாக்கியை பயன்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் தொலைந்து போயிருந்த கையடக்க தொலைபேசி தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விசாரணை நடாத்தி நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த தொலைந்து போனமை தொடர்பாக பொறுப்புவாய்ந்தவரை தீர்மானிப்பதற்காக விசாரணைக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், உரிய அறிக்கை கிடைத்த பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கடந்த சில தேர்தல்களுக்காக சரியான திட்டமிடல் இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12,848,164 பெறுமதியான பல்வேறு வகையிலான டோனர், ரிபன், மாஸ்டர் ரோல், வர்ணங்கள் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்று காணப்பட்டது. | பொறுப்பு வாய்ந்தவரை நிர்ணயிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், குழுவின் அறிக்கை பெறப்பட்டதன் பின்னர் தேவையான மிகுதி நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணம் 104(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து பொறுப்பு வாய்ந்தவரை தீர்மாணித்தலை விரைவாக மேற்கொள்ளல் வேண்டும். |

### 3.3 நட்டம் மற்றும் இழப்பு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த 03 வாகன விபத்துக்களுக்குரிய ரூபா 151,192 தொகையை ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட விபத்துக்களில் இருந்து மேலும் அறவிடுவதற்கு முடியாதிருந்த மற்றும் புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு முடியாதிருந்த இழப்புக்களின் பெறுமதி ரூபா 2,598,736 ஆகும். | மீளாய்வாண்டில் இடம் பெற்ற 03 வாகன விபத்துக்களில் மதிப்பீடு செய்யப்பட்ட நட்டத்தில் ரூபா 151,192 அறவிடுவதற்கு உள்ளது. 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட வாகன விபத்துக்களை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு கட்டளை கிடைத்துள்ள நட்டத்தை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாகன விபத்துக்கள் தொடர்பான இழப்புக்களின் பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இழப்பு நட்ட பதிவேட்டின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவழிக்கப்படாமல் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 2,671,428 ஆன மீதியை | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதிவழிக்கப்படாமல் முன்கொண்டுவரப்படுகின்ற மீதிகளை புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றில் |

| | | |
|---|---|---|
| புத்தகங்களில் இருந்து பதிவழித்தல் தொடர்பான கூற்றின் இணைப்பு ii இல் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | இணைப்பு ii இல் காண்பித்தல் வேண்டும். |

**3.4 முகாமைத்துவ நலிவுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 யூலை மாத்தின் போது இராணுவ சேவைக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து மேலும் அறவிட வேண்டிய ரூபா 97,110 ஆன கடன் மீதி மற்றும் 2021 மே மாதத்தில் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 129,080 ஆன கடன் மீதி 2022 ஆம் ஆண்டின் போதும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | இராணுவ சேவைக்காக விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தரால் இறுதியாக 2022.12.02 ஆம் திகதி ரூபா 10,000 தொகையொன்று தீர்க்கப்பட்டிருந்ததுடன், 2021 மே மாதம் ஓய்வுபெற்றுச் சென்ற உத்தியோகத்தரின் ஓய்வூதியக் கோவை இது வரை பூரணப்படுத்தப்படாமையினால் கடன் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | கடன் மீதியை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவின் சிரேஷ்ட நிலையில் 06 பதவிகள், மூன்றாம் நிலையில் 09 பதவிகள், இரண்டாம் நிலையில் 42 பதவிகள் மற்றும் ஆரம்ப நிலையில் 29 பதவிகள் என்பன வெற்றிடமாக காணப்பட்டது. | வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விரைவாக வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலாற்றலில் பாதகமாக தாக்கமளிக்கின்ற அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |